1969 மார்ச 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேண்டாம் என்று சொல்லவில்லை. முடியட்டும், சொல்லலாம் என்று சொன்னேன். அதில் பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

(ஆ) சுருட்டப்பள்ளி அணைத்திட்டத்திற்கு ஆரணியாறு நீர்த் தேக்கத்திலிருந்து தண்ணீர் வராததால் ஏற்பட்டுள்ள பாதிக்கப்பட்ட நிலை.

திரு. கா. வேழவேத்தன் : தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியமான கீழ்க்கண்ட காரியத்தை, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"தமிழகம், ஆந்திரம் ஆகிய இரு மாநிலங்களுக்கும் உரிமையான ஆரணியாறு நீர்த்தேக்கத்திலிருந்து ஒப்பந்தப்படி சுருட்டப்பள்ளி அணைத் திட்டத்திற்கு வந்து கொண்டிருந்த தண்ணீர் இப்போது வராததால் தமிழக வடக்குப் பகுதிகளில் பாசனம் பெற்று வந்த 6,000 ஏக்கர்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலைபற்றியது".

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, சுருட்டப்பள்ளி அணைக்கட்டின் தலைப்பு மதகு வரவுகால் 1967-68-ல் பெய்த மழையின்போது தூர்று படிந்து விட்டது. வரவுகாலின் வலது கரை மண் அரிக்கப்பட்டது. இதனால் சுருட்டப்பள்ளி அணைக்கட்டின் கீழ் தமிழ் நாட்டில் இப்போது பாசனத்தில் இருந்து வரும் 6,066 ஏக்கரில், 1967-68, 1968-69-ம் ஆண்டுகளில் எவ்வளவு ஏக்கர்கள் பாதிக்கப் பட்டுள்ளன என்ற புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. 1960-ம் ஆண்டு முதல், 1967-ம் ஆண்டு வரை ஆண்டு ஒன்றுக்கு சராசரியாக முதல் போகத்தில் 677.21 ஏக்கரும், இரண்டாவது போகத்தில் 494.61 ஏக்கரும் சாகுபடி செய்யப்படவில்லை. ஆந்திரப் பிரதேச அரசு அணைக்கட்டைச் சரிவரப் பேணி வராததாலும் சுருட்டப்பள்ளி அணைக் கட்டின் ஆயக்கட்டு முழுவதும் தமிழ்நாட்டிலே அமைந்துள்ளதாலும், வாய்க்கால் நீரை ஒழுங்காக வழங்குமாறும் அணைக்கட்டினைப் பேணி வரும் பொறுப்பினை தமிழ்நாட்டு அரசிற்கு மாற்றிக் கொடுக்குமாறும் ஆந்திரப் பிரதேச அரசுக்கு எழுதக் கருதப்பட்டுள்ளது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, மேற்கொண்டு அமைச்சர் கொடுத்த விவரத்திற்கு மேலாக, ஆரணியாற்றின் அணைக்கட்டு சம்பந்தப்பட்ட ஒப்பந்தத்தை கூறி, ஆந்திரா வாய்க்கால் நீர் விடாதது சட்ட விரோதமானது என்கிற தகவல் வந்துக்கொண்டிருக்கிறது. ஆகவே, மத்திய சர்க்கார் நீர்ப்பாசன அமைச்சருடன் பேச்சு வார்த்தை நடத்தி, தக்க வழிவகை செய்யுமா நம் அரசு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதற்கான வழிவகைகளை இந்த அரசு செய்யும்.

(5) தன்னிலை விளக்கம்.

"வக்காலத்து" என்ற சொல்லை அமைச்சர் தன் துணை வினாவிற்கு விடையளிக்கையில் பயன் படுத்தியது குறித்து திரு. ப. மகாதேவன் விளக்கம்.

திரு. ப. மகாதேவன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவு அமைச்சர் நான் ஒரு உண்மையைக் கூறியபோது, வெளிநாட்டுக் கோதுமை பஞ்சாப் கோதுமையைவிட, ஏற்றுமதிச் செலவு முதலியவை இருப்பதால் விலையில் அதிகமாக, கூடுதலாக இருக்கிறது, அதை ஒரு முகப்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றி சொன்ன போது, ஒரு உண்மையைச் சொன்ன நேரத்தில், "இன்வலினுவேஷன்" ஆக, வக்காலத்து